**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**நாள். 13.03.2026.**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண்.53/2019**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம் உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ந.அசோக்குமார் | மாவட்டம் | : | காஞ்சிபுரம் |
| த/பெ | : | நடராஜன் | வயது | : | 45 |
| ஊர் | : | காஞ்சிபுரம் | தொழில் | : | வட்டாட்சியர் |

**பி.வ.சா.3 முதல் விசாரணை:**

என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது மனை எண்.9 கோபாலன் மகன் செல்வமணி என்பவருக்கும், 63 நபர்களுக்கும் சேர்த்து பட்டா கொடுத்துள்ளார்கள். மேற்படி ஆவணத்தில் ஒரு வருடத்திற்குள்ளாக வீடு கட்ட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நிபந்தனையோடுதான் கொடுக்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணமானது என்னவென்றால் 08.03.2019ம் தேதியன்று மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர் அவர்களால் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணமானது மார்கபந்து என்பவரால் மனு கொடுக்கப்பட்டு, சர்வே எண்.782/13-ல் எச்.எஸ்.எண்.51/1410-ன் படி 60 நபர்களுக்கு நமுனா வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அலுவலகத்தில் மேலெழுத்தாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் 11.02.2020 அன்று கொடுக்கப்பட்டதாகும். அதனின் அலுவலக நகல் தற்போது என்னிடம் உள்ளது. மேற்படி அலுவலக நகலை சான்றிட்ட நகலாக நீ.மா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் 2-ஆம் பக்கத்தில் 3-ம் பத்தியில் மனுதாரருக்கும், மனுதாரரின் மனைவிக்கும் வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக பட்டா வீட்டில் ஒருவருக்குத்தான் கொடுக்கப்படும் என்றால் சரிதான். இந்த ஆவணத்தின்படி தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. அதன் தொடர்ச்சியாக மேற்படி ஆவணத்தில் அரசு மூலம் வீட்டுமனை பட்டா வழங்கப்பட்ட ஓர் ஆண்டிற்குள் பயனாளிகள் வீடு கட்டி குடியிருக்க வேண்டும் என்று நிபந்தனை உள்ளது. மனுதாரர் மேற்படி இடத்தில் கொட்டா மட்டும் கட்டியுள்ளார். அதன் தொடர்ச்சியாக மேற்படி ஆவணத்தில் திருமதி. லட்சுமி என்பவர் வீட்டுமனை பட்டா வழங்குவதைப்போல அப்புலத்தில் அனுபவம் வைத்திருந்து, அதன் மூலம் செய்யப்பட்ட கிரைய ஆவணங்கள் அடிப்படையில் கிரையம் பெற்று, அவர் கிரையம் பெற்ற பகுதியில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணமானது நன்றாக விசாரணை செய்த பிறகுதான் கொடுக்கப்பட்ட ஆவணம்தான். இன்னும் சில ஆவணங்களை மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரமானது என்னுடைய கோப்புகளை சரிபார்த்துதான் தெரிவிக்க முடியும். சர்வே எண்.782/1 ஆனதுதான் பின்னாளில் உட்பிரிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பட்டாவானது மொத்தம் 60 நபர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண். 782/13 என்றால் முதலில் 782/1 என்றும் யூ.டி.ஆர்-க்கு பிறகு 782/13 என்று மாறியது. மேற்படி 782/13-ல் தான் 60 நபர்களுக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் செல்வமணி என்பவருக்கு எந்த மனை எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் மனை எண்.9 கொடுக்கப்பட்டுள்ளது. மனை எண்.42 யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சம்பத் மனைவி லட்சுமி என்பவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது செல்வமணி மனை எண்.9 ஆனது சர்வே எண்.782/27 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா எண்.738 ஆனது கோபால் மகன் செல்வமணி பெயரில் எங்கள் அலுவலகத்திலிருந்துதான் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணமானது வா.த.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் பழைய புல எண் விடுப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த பழைய புல எண். 782/13 என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.782/1, 782/13 ஆனது அரசுக்கு சொந்தமான கிராம நத்த புறம்போக்கு நிலமாக இருந்தது என்றால் சரிதான். ஆதியிலிருந்து மேற்படி நிலமானது யாருடைய தனிப்பட்ட பெயரில் இருந்ததில்லை என்று சொன்னால் சரிதான். அது அரசு புறம்போக்காகத்தான் இருந்தது. அதனால்தான் 60 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். பட்டா கொடுக்கப்பட்டுள்ள 60 நபர்களை தவிர்த்து, வேறு யாரும் அதில் உரிமைகோர முடியாது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் நீ.ம.சா.1 2ம் பக்கத்தில், 3 பத்தியில் லட்சுமி என்பவர் கிரைய ஆவணத்தின்படி கட்டியுள்ள வீடானது அரசு மூலம் வழங்கப்பட்ட வீட்டுமனை பட்டா கோப்பின்படி மனுதாரரது மனைவி மற்றும் மைத்துனர் ஆகியோருக்கு சொந்தமான மனை எண்.5,8,9,10,11,12,13,14 மற்றும் 15 ஆகியவற்றை சேர்ந்து வீடு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனை எண்.9-ஆனது செல்வமணிக்கு சொந்தமான மனையில்தான் லட்சுமி என்பவர் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது நிபந்தனை பட்டா என்று எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் 4-ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் 4-ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று ஒருவருட காலம் வரையில் அனுபவிக்காமல் பழுதான நிலையில் இருக்கும்படி விடப்பட்டாலும், அது உடனே மறுபடியும் பிரவேசித்து அந்த மனையாவது கட்டிடத்தையாவது சுவாதீனப்படுத்திக் கொள்ள அரசாங்கத்தாருக்கு பாத்தியதை உள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் இன்று வரை ஏதேனும் திரும்ப பெறுவதற்கு

நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நிபந்தனை பட்டா கொடுக்கப்பட்டுள்ளபடி அதனை மீறினால் பட்டா கொடுக்கப்பட்டுள்ளவர்களுக்கும் மற்றும் அரசாங்கத்திற்கு மட்டும்தான் உள்ள பிரச்சனை என்றால் சரிதான். அதில் வேறு நபர்கள் யாரும் குறுக்கீடு செய்ய முடியாது என்றால் சரிதான். சர்வே எண்.782/13 ஆனது சர்வே எண்.782/27 என எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது ஆனால் தேதி தெரியவில்லை.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது**

**<u>மறுவிசாரணை</u>**

நீ.ம.சா.1 2ம் பக்கத்தில், 3 பத்தியில் ஆவணத்தில் லட்சுமி என்பவர் வீட்டுமனை பட்டா வழங்குவதற்கு முன்னர் அப்புலத்தில் அனுபவம் வைத்திருந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் தற்போது யார் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் மார்கபந்து என்பவர் கொட்டா கட்டியும், லட்சுமி என்பவரும் வீடு கட்டியும் இருந்து வருகிறார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

மேற்படி லட்சுமி என்பவர் அனுபவத்தில் இருந்தார் என்று குறிப்பிட்டுள்ளது எந்த புலத்தில் என்று குறிப்பிட்டு, தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.13 17:35:44 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு